**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 60/2019** **Date:28.07.2025**

**(DW1)- கங்காதரன்**

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

**1.** இந்த வழக்கில் எனது மனைவி தான் 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் என் மனைவிக்காக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து 1 ம் வாதிக்கும் அவரது சகோதரர் தங்கமணிக்கும் வாசாஆ. 1 ஆவணப்படி 15 சென்ட் உரிமைப்பட்டது என்றால் சரிதான், மேற்படி ஆவணத்தில் 15சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ. 1 ஆவணம் 1ம் வாதியும் அவரது சகோதரரும் கூட்டாக விலை வாங்கிய கிரய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ. 1 ஆவண சொத்தை சங்கரப்பிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

**2.** மேற்படி வாசாஆ. 1 ஆவணத்தில் பட்டிகை சொத்து புதிய புல எண் 815/4 சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை 1ம் வாதியும் அவரது சகோதரரும் வாய் மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அவ்வாறு தெரியவில்லை. மேற்படி சொத்தை மேற்கே 7 ½ சென்ட் 1 ம் வாதிக்கும் கிழக்கு பக்கம் உள்ள 7 ½ சென்ட் தங்கமணிக்கு என்று வாய் மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட மேற்கு பக்க 7 ½ சென்ட் நிலம் புதிய புல எண் 815/4 சி 1 ஆக பிரிந்தது என்றால் அது பற்றி தெரியாது.

**3.** மேற்படி 1 ம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து தற்போது உட்பிரிவின் படி சர்வே எண் 815/4 சி 1 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கமணி வாசாஆ. 2 மூலம் எனது மனைவிக்கு 3 சென்ட் நிலம் கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ. 2 ஆவணத்தில் தங்கமணி தனக்கு 15 சென்ட் உரிமைப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் மேற்படி ஆவணத்தில் தங்கமணிக்கு 15 சென்ட் உரிமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**4.** மேற்படி சர்வே எண் 815/4 சி 1 பி சொத்தில் 1 ம் வாதிக்கு பாத்தியப்பட்ட 7 ½ சென்ட் சொத்தும் அவருக்கு கைவச அனுபவ பாத்தியத்தில் உள்ள வேறு சில சொத்துகளையும் தன்னுடைய மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 815/4 சி 1 தான் 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி சர்வே எண் 815/4 சி 1 ல் 7 ½ சென்ட் சொத்தும் பின்கைவச அனுபவப்படி உள்ள சொத்தும் சேர்ந்து 6 ஏர் சொத்து 1 ம் வாதிக்கு உள்ளது என்றும் அதை தன் மனைவிக்கு மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் மொத்தம் 6 ஏர் 2ம் வாதிக்கு உள்ளது என்றும் அது சர்வே எண் 815/4 சி 1 பி ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**5.** தங்கமணியின் கிழக்கு பக்க பங்கு சொத்து சர்வே எண் 815/4 சி 2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தங்கமணி எனது மனைவிக்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் மொத்த விஸ்தீரணம் 15 சென்ட் என்றும் அதில் அவருக்கு உரிமைப்பட்ட 7 ½ சென்டில் 3 சென்ட் நிலம் எனது மனைவிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் எனது மனைவிக்கு எழுதி கொடுக்கும் போது பாகப்பிரிவினை நடைபெறவில்லை, எனது பத்திரத்திலும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

**6.** நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் வாசாஆ. 2 ஆவணத்தில் தங்கமணி வாய்மொழியாக பாகம் பெற்ற சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்